நற்பணியே நம் வாழ்வு!
MADURAI SEED

மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும்

# புதிய வெளிச்சங்கள்

தனிச்சுற்று இதழ்

"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"

அக்டோபர் 2011 - மார்ச் 2012 | உலகு - 6 | வெளிச்சம் - 11

## புதிய வெளிச்சங்கள்

அன்புடையீர்,

வணக்கம், 2012 - 13 ஆம் கல்வியாண்டில் மதுரை சீடு வழியே 2 இன்ஜினியர்கள், 5 பட்டதாரி ஆசிரியர்கள், இரண்டு முதுகலை (சமூகவியல் மற்றும் சுற்றுலா நிர்வாகவியல்) பட்டதாரிகள் உருவாகியுள்ளனர். மோகன், இராமச்சந்திரன், பாஸ்கர்ராஜா, அழகிரி, சரவணக்குமார், மகுடபதி, கற்பகஜோதி, தங்கலெட்சுமி, சுகன்யாதேவி ஆகியோர் தங்கள் கல்வியினை திறமையுடன் முடித்து வாழ்க்கைத் தோணியிலே பயணிக்க துவங்கி விட்டனர்.

அனைவரின் வாழ்வும் வளம் பெற, வளமைகள் பெருகிட மதுரை சீடு வாழ்த்துகின்றது.

இவண்

மதுரை சீடு நிர்வாகக் குழு

புதிய வெளிச்சங்கள் பொறுப்பாளர் - **C.கற்பகஜோதி** B.A., B.Ed.,

மதுரை சீடு இளைஞர் பேரவை தலைவர்கள் : 2012-13

**P.சரவணக்குமார்** B.E, **S.முருகேஸ்வரி** B.A.

**ஆசிரியை : V.மாரியம்மாள்** M.A., M.Ed., **A.S.கார்த்திக்பாரதி** M.A., M.Phil., B.Ed., **M.மன்சூர்அலி** M.A.,

**அறங்காவலர்கள், மதுரை சீடு தொண்டு நிறுவனம்**

தொடர்புக்கு.

**MADURAI SEED YOUNG PEOPLE FEDERATION (MSYF)**
**MADURAI SEED**
**Arjun Shanmuga Illam, 439/1 East Street,**
**Karumbalai, Madurai - 625 020. Ph : 0452 - 2537670, 9442537670**
**E-mail : maduraiseed1999@gmail.com Web : madurai-seed.org**

## ஏப்ரல் 2007 முதல் மார்ச் 2013 வரை
## மதுரை சீடு மூலம் பயனடைந்த இளைஞர்கள்

| விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| கணிணி, தையல், செவிலியர் சான்றிதழ் படிப்பு முடித்தவர்கள் | 33 | 10 | 43 |
| பல்தொழில்நுட்ப படிப்புகள் | 01 | 01 | 02 |
| முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் | 5 | 0 | 5 |
| இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் | 24 | 9 | 33 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 3 | 6 | 9 |
| பட்டதாரி இன்ஜினியர்கள் | 7 | 0 | 7 |
| முதுகலை சுற்றுலாவியல் | 1 | 0 | 1 |
| முதுகலை சமூகப்பணி | 1 | 0 | 1 |
| அரசுப்பணி (எழுத்தர், காவல்துறை மற்றும் பிற) | 4 | 1 | 5 |
| தனியார்துறை (மார்க்கெட்டிங், எலக்ட்ரிசீயன் மற்றும் பிற) | 16 | 0 | 16 |



2012-13ஆம் ஆண்டு ஆசிரியத் தொண்டர்கள் மற்றும் அறங்காவலர்கள்

# சமூகத்தின் சொத்துக்கள்

கடலில் சென்றுகொண்டிருந்த போது கப்பல் உடைந்துவிட்டது. இரண்டு பயணிகள் எப்படியோ நீந்தி அருகிலிருந்த தீவை அடைந்தார்கள். ஒருவர் புகழ் பெற்ற பேராசிரியர். மற்றவர் ஒரு வியாபாரி. ஆளற்ற தீவு அது. வியாபாரி பெருங் குரலில் கத்தி அழத் தொடங்கினார்.

ஐயோ இனி எப்படி இந்தத் தீவிலிருந்து தப்பிக்கப் போகிறோம். என்று தெரியவில்லையே! இந்தத் தீவிலேயே நாம் பட்டினி கிடந்து சாகப்போகிறோம்!. நம்மைக் காப்பாற்ற யார் வரப்போகிறார்கள்? தண்ணீரும், சாப்பாடும் இல்லாமல் எத்தனை நாள் உயிரோடு இருப்போம்.

பேராசிரியர் மிகவும் அமைதியாக ஒரு மரத்தில் சாய்ந்து அமர்ந்திருந்தார். வியாபாரி பேராசிரியரைப் பார்த்துக் கத்தினார்.

உங்களுக்குச் கொஞ்சம் கூட பயம் இல்லையா? இந்த அபாயமான சூழ்நிலையில் அமைதியாக இருப்பதற்கு எப்படி உங்களால் முடிகிறது? பேராசிரியர் சொன்னார் :

நண்பனே நான் இங்கே தனியாக இல்லை என் மனதில் எப்போதும் என் மாணவர்களைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். நான் ஒரு கல்லூரிப் பேராசிரியர்...

நீங்கள் பேராசிரியராக இருந்தால் என்ன பெரிய அதிகாரியாக இருந்தால் என்ன? உங்களால் எப்படி இங்கிருந்து தப்பித்து போகமுடியும்? உங்கள் கதையும் இங்கேதான் முடியப்போகிறது!

இல்லை, இல்லை நான் என் மாணவர்களுக்கு மிகவும் பயனுடையவனாக இருக்கிறேன். அவர்களின் உயர்வுக்காக என் வாழ்க்கையே அர்ப்பணித்திருக்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் எங்கிருந்தாலும் மக்கள் என்னைக் கண்டுபிடித்துவிடுவார்கள். ஏனென்றால் நான் இந்த சமூகத்துக்கு மிகவும் தேவைப்படுபவன்.

அவர் சொன்னது போன்றுதான் நடந்தது. விரைவிலேயே மீட்புபடையினர் தேடிக் கண்டுபிடித்து வந்து பேராசிரியரையும் அவருடன் இருந்த வியாபாரியையும் காப்பாற்றி அழைத்துச்சென்றனர்.

பிறர் நலன் கருதி வாழ்பவர்கள் இந்த சமூகத்தின் சொத்துக்கள் சொத்துக்களை இழப்பதற்கு எந்த சமூகமும் சம்மதிக்காதுதானே.

# நன்றியறிதல்

ஒரு மருத்துவமனை, பார்வையாளர்களுக்காக அதன் முகப்பில் சில நாற்காலிகள் இடப்பட்டிருந்தன. அந்த நாற்காலிகளில் ஒன்றில் ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான். அவன் மிகவும் கலக்கத்துடன் காணப்பட்டான். இவனைப் பார்த்த ஒரு மருத்துவர் இந்த இளைஞன் ஏன் இப்படித் துயரத்துடன் அமர்ந்திருக்கிறான்? என்று நினைத்தார். அவன் கவலையின் காரணத்தைத் தெரிந்துகொள்வதற்காக அவன் அருகே சென்று பேசினார். தம்பி நான் உன்னை நீண்ட நேரமாகவே கவனித்துக் கொண்டிருக்கிறேன். ஏன் மிகவும் துயரத்துடன் அமர்ந்திருக்கிறாய்? உனக்கு உடல் நலமில்லையா?

அந்த இளைஞன் சொன்னான், ஐயா வரும்போது என் காலில் அடிப்பட்டுவிட்டது. அதற்கு மருந்து வைத்துக் கட்டிக்கொள்ளத்தான் இங்கே வந்தேன். என் நண்பன் ஒருவன் இதே நகரத்தில் தூரத்தில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான் நான் இப்போது அவனுக்கு உணவு எடுத்துச் செல்ல வேண்டும். ஒன்றாக அமர்ந்து சாப்பிட வேண்டும். அதற்குத் தாமதமாகிறதே என்ற கவலைதான் எனக்கு.

மருத்துவர் இளைஞனின் மீது அன்புகொண்டார். அவரே அவனது கால் காயத்திற்கு மருந்திட்டுக் கட்டுப்போட்டார். அப்போது பேசிக்கொண்டிருக்கும்போது அந்த இளைஞனின் நண்பன், பழைய விஷயங்களை மறந்துவிடுகிற ஒரு வித நோயால் பாதிக்கப்பட்டு நகர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பது தெரிந்தது. மருத்துவர் கேட்டார். "தம்பி நீ சற்றுத் தாமதமாகச் சென்றால் உன் நண்பன் சிரமப்படுவானா? உன்னுடன் சேர்ந்து உணவு அருந்துவதற்காகக் காத்திருப்பானா? இல்லை அவனுக்கு இப்போது என்னை யார் என்றே தெரியாது அவன் என்னை மறந்து வெகுநாட்களாகின்றன" என்று இளைஞன் கூறினான்.

மருத்துவர் வியப்படைந்தார், பிறகு "நீ ஏன் இவ்வளவு கமிலைப்படுகிறாய். உன் நண்பனுக்குத்தான் உன்னைத் தெரியாதே நீ தாமதமாகச் சென்றாலும் பிரச்சினை ஒன்றுமில்லையல்லவா?" என்று மீண்டும் கேட்டார்.

இளைஞர் புன்னகையுடன் சொன்னான். அவனுக்குத்தான் என்னைத் தெரியாது. ஆனால் அவன் எனக்கு எவ்வளவு அருமையான நண்பன் என்று எனக்கு இப்போதும் தெரியுமே, எனக்கு மிகப்பெரிய உதவிகளைச் செய்தவன் அவன். மனம் நெகிழ்ந்த மருத்துவர் இளைஞனை அணைத்துக்கொண்டு சொன்னார்.

"நீ சொல்வது உண்மைதான் நண்பனே, நம்மைப் பலர் மறந்துவிடலாம். நம்மைவிட்டுப் பிரிந்து செல்லலாம். ஆனால் நாம் நம்மை நேசித்த யாரையும் மறக்கக்கூடாது. வால்மீகி எழுதிய ராமாயணத்தில் இருபத்து நான்காயிரம் பாடல்கள் உள்ளன. இத்தனைப் பாடல்களின் மூலமாக வால்மீகி நிறையக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அவை அனைத்திலும் முக்கியமானது நன்றியைக் குறித்து அவர் சொன்னவைதான் அதிகம்" என்று சொல்லி மகிழ்ந்தார்.